அபிவிருத்தித்திட்டமா, அழகுபடுத்தும் திட்டமா?

Phone No 4502 Regd. No. M. 5458
விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (23—2—50) வெளியூர் (24—2—50) [இதழ் 176

நகர வாழ்வில் நல்வாழ்வும் நாகரிகமும் தேவை

வாழ்விடம் மட்டுமே யன்றி வாழ்க்கை முறையும் மாறவேண்டும்

—————(0)—————

குடிசைகள் நீக்கம் மட்டும் போதாது: குறைகளும் நீங்கவேண்டும்

ஒரு இடத்தில் சில குடிசைகள் சேர்ந்திருந்தால் மட்டு அவை ஊைச் சேரி என்று சொல்லிவிட முடியாது. சில வி ங்களில் ஓட்டு வீடுகள் சேரிகளைவிட படுமோசமாய் இருக்கின்றன.

குடிசைகளை நீக்கிவிடுவதால் மட்டும் சேரி அபிவிருத்தி வேலை முடிந்துவிடாது. குடிசைப் பிரதேசங்களில் நல்ல அகலமான ரோடுகள் போடுவது, குடி தண்ணீர் அளிப்பது, நல்ல சாக்கடைகள், விளக்குகள் முதலிய இருக்க வேண்டும்.

என்று, சென்னையில் நடைபெற்ற சமூக நலம் நாடும் நாள் கொண்டாட்டத்தின் போது, சென்னை நகராண்மைக் கழக கமிஷனர் பேசியிருக்கிறார்.

இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த பவநகர் மகாராணி, தோழியர் ரங்கா ஆகியோர், சமூக நலம்பற்றி ஏதேதோ பேசியிருக்கின்றனர், ஒவ்வொருவரும் தத்தம் கருத்தை வெளியிடும்முறையில், பழைய பல்லவியையே திருப்பிப் பாடியுள்ளனர்.

எந்த நாடும் முன்னேற வேண்டுமானால் சமூக சேவை அவசியம். என்று பவநகர் மகாராணியும், சமுதாய நலன் தான் நாட்டு நலம் என்று தோழியர் ரங்காவும் பேசியிருக்கின்றனர் ஆனால் மேற்படி கூட்டத்தை ஆரம்பித்து வைக்கும் முகத்தான் நகராண்மைக் கழக கமிஷனர் பேசியிருக்கும் பேச்சு ஒன்றிலே தான் ஒரு சில பயனுள்ள கருத்துக்கள் காணக்கிடக்கின்றன அவர் கூறுகிறார் குடிசைகள் சேர்ந்திருக்கும் இடங்களை மாத்திரமே சேரி எனக் கொள்ளக்கூடாதென்று.

ஆம், இது முற்றிலும் உண்மை. நகரில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள, ஒரு சிலவிடங்களைத்தான் நாம் சேரியென நினைக்கிறோம். ஆனால் நகர நிலைமையை நன்கு அறிந்தோர் அங்ஙனம் நினைக்கமாட்டார்கள். சேரிகளைவிட மோசமான இடங்கள் பல நகரத்தில் உள்ளன. ஆனால் 'சேரி' என்ற பெயர் பெருத காரணத்தால், அப்பகுதிகள் புனிதமாகக் கருதப்படுகின்றன. நன்கு ஆராய்ந்து பார்க்கின்றபோது பொதுவாக, சென்னை நகரை இரண்டே பிரிவாகத்தான் பிரித்துக் கூறவேண்டும். அதாவது, ஏழைகள் வாழுமிடம், பணக்காரர்வாழுமிடமென்று. நகரில் உள்ள பல பகுதிகளையும் இந்த அடிப்படையில் பிரித்துப் பார்த்தலே சாலச் சிறந்ததும், பயனுள்ள பணியும் ஆகும். அப்படிப் பார்க்கின்றபோது மாம்பலம், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி முதலிய பகுதிகள் செல்வரும் உயர்ந்தோரென தம்மைக் கருதிக்கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தினரும் வாழும்—வாழத்தகுந்தஉல்லாசபுரிகளாகவும், சூளை, குயப்பேட்டை,

(தொடர்ச்சி 3 ம் பக்கம்பார்க்க)

லெனின்கிராடில் ராணுவச் சட்டமாம்!

சதிக்கூட்டம் வேலை செய்கிறதாம்!

பின்னிஷ் செய்திகள் பிதற்றல்!

ஸ்டாக்ஹோம், பிப். 22—

லெனின்கிராடில் தலைதூக்கிய சதிக்கூட்டத்தை ஒடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதென்றும், லெனின்கிராடில் ராணுவச் சட்டம் அமுல் நடத்தப்படுகிறதென்றும் பின்னிஷ் பொருளாதார நிபுணர்களும், ரஷ்ய பின்னிஷ் எல்லையில் வந்து சேர்ந்துள்ள பிரயாணிகளும் கூறுவதிலிருந்து தெரியவருவதாக இங்கு செய்திகள் கிடைத்திருக்கின்றன.

சதிக் கூட்டத் தலைவர் என்று சொல்லப்படும் கோவராவ் சென்ற இடம் தெரியவில்லை. அவர்தலைமறைவாக இருக்கிறாரா அல்லது கைது செய்யப்பட்டாரா அல்லது எங்காவது ஓடிவிட்டாரா என்பது தெரியவில்லை.

இதுவரை என்றுமே இல்லாத அளவுக்கு ஏராளமான பேர்கள் அங்கு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது

லெனின்கிராடுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையேயுள்ள பிரயாணிகள் போட் சர்வீஸ் ஸோவியத் ஆதிக்கத்திலுள்ள பால்டிக் துறைமுகங்கள் வழியாக திருப்பப்பட்டிருக்கின்றன. லெனின்கிராடிலுள்ள காவல் படைகள் மிகவும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. அனுமதியின்றி எவரும் வெளியேற முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கின்றனர்.

லெனின்கிராட் சதிக்கூட்டத்தைப் பற்றி விசாரணை செய்ய, மார்ஷல் ஸ்டாலினே லெனின்கிராடுககு விரைந்தார் என்று, சில பின்னிஷ் செய்திகள் கூறுகின்றன.

செஞ்சேனையுடன் ஸ்டாலின் அவருடைய போலிட்பீரோ இவர்களுக்குள்ள 5 வருஷ தகராறே இந்த சதி ஏற்பட்டதற்குக் காரணம் என்று மற்றும் சில செய்திகள் கூறுகின்றன.

ஜெர்மன் படையெடுப்பின்போது ரஷ்யாவைப் பாதுகாத்தஜெனரல்கள் தங்களை மதியாமல் புறக்கணித்துவிட்டதாக முணுமுணுத்து வந்தனர் என்றும், அணுக்குண்டு, ஹைட்ரோஜன் குண்டுகளால் செஞ்சேனையே அடியோடு நிர்மூலமாகிவிடுமோ என்ற பீதி ராணுவத் தலைவர்களிடையே ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

புது அணுசக்தி ஸ்டேஷன்

லண்டன், பிப். 22—

செண்டநக்ஷம் எல்லஸ்மேர் போர்டுக்குமிடையே அணுசக்தி ஸ்டேஷன் ஒன்று ஏற்படுத்தப்பட விருக்கிறதென்றும், இது 1952 ல் வேலை செய்ய ஆரம்பிக்கும் என்றும் தெரிகிறது.

"ஆரியமாயை" வழக்கு

"ஆரியமாயை"யின் ஆசிரியர் என்ற காரணத்துக்காகத் தோழர் சி. என். அண்ணாதுரை மீது தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கு, திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில், 24—2—50 வெள்ளிக்கிழமையன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

உள்நாட்டுப் போருக்கு வழி கோலுகிறார் மலான்!

பிரிட்டிஷ் பத்திரிகை எச்சரிக்கை

லண்டன், பிப் 22

தென்னாப்பிரிக்காவில் சுதேசிகள் அடிக்கடி கலகம் செய்வதற்கு மூல காரணம், மலான் சர்க்காரின் நிறத்திமிர் கொள்கைதான் என்று நடுநிலைமை வகிக்கும் விமர்சகர்கள் கூறி வருகிறார்கள். சர்க்கார் தங்கள் கொள்கையை மாற்றினாலன்றி நிலைமை சீர்படும் என்று தெரியவில்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

கடைசியாக நடைபெற்றகலகம் தான் கடைசி. இனி எதுவும் அது மாதிரி நடைபெருது என்று சொல்வதற்கு முடியாமல், அங்குள்ள நிலைமை இருக்கிறது என்றும் நிறவெறிக் கொள்கையால் உள் நாட்டுப் போர் நடைபெறுகிறது என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை இருந்து வருகிறது என்று ஜோலஹான்மைஸா பார்கில் உள்ள டெய்லி டெலகிராம் நிருபர் கூறுகிறார்.

பொது ஜனக்களுக்கு ஆபத்து ஏற்படுவதால் சுதேசிகளையே அப்புறப்படுத்தி வாழச் செய்வது என்று மலான் சர்க்கார் யோசித்துள்ள முறையில், இன்னும் விபரீதம் நேரலாம் என்றும் இந்நிருபர் கூறுகிறார்.

பிரஜைகள் பதிவு செய்து கொள்ளும் மசோதா இப்பொழுது தென்னாப்பிரிக்க பார்லிமெண்டில் கொண்டுவரப் பட்டிருக்கிறது நிறத்திமிர் நடவடிக்கை மசோதா என்பதினாலும் இதனால் நிர்வாக செலவு அதிகரிக்கும் என்பதினால், இது தீவிரமாக எதிர்க்கப்படும் என்று தெரிகிறது.

அந்நிய கலாசாரத்துக்கு அடிமையாகாதே!

ஜெக் சர்க்கார் தீவிரம்!

லண்டன், பிப். 22—

மேற்கு நாடுகளின் கலாசாரம் செக்கோஸ்லாவியாவில் பரவாமலிருக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை ஜெக் சர்க்கார் எடுத்துவருவதாக வியன்னா வந்துசேரும் அகதிகள் கூறுகின்றனர்.

பிரிட்டிஷ் கௌன்ஸில் கட்டிடத்தில் பிரிட்டிஷ் கவிதை சம்பந்தமான பிரசங்கத்தைக் கேட்ட ஏழு ஜெக் வாசிகளைப் போலீஸார் கைது செய்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ், பிரெஞ்சு கலாசார ஸ்தாபனங்கள், பொது போலீசாரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

தென் ஆப்பிரிக்காவில் இந்திய தூதுகோஷ்டி

டர்பன், பிப். 22—

வட்டமேஜை மாநாட்டின் பூர்வாங்க சம்பாஷணைகளை முடித்துக் கொண்ட இந்திய தூதுகோஷ்டியினர் இந்தியர்கள் வசிக்கும் பல இடங்களுக்கு விஜயம்செய்து வருகின்றனர். இவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் இந்தியர்களால் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தியா தன்னால் முடிந்த எதையும் இந்தியர்களுக்குச் செய்யும் என்ற உறுதிமொழியை இவர்கள் பொதுக்கூட்டங்களில் அறிவித்து, தென்னாப்பிரிக்க இந்தியர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இவர்களுக்கு டர்பன், ஜோகனஸ்பர்க் முதலியவிடங்களில் பெருத்த வரவேற்புகள் அளிக்கப்பட்டன. இக் குழுவினர் கென்யாவுக்கும், கெய்ரோவுக்கும் சென்றுவிட்டு இந்தியா திரும்புவர்.

—

லண்டன், பிப். 22—

பிரிட்டிஷ் தேர்தலைப் பற்றி தன் கருத்துகளை அத்தேர்தலில் லிபரல் அபேட்சகராக போட்டியிடும் இந்தியர் ஆற்றுவாலியா தேர்தல்தினமான வியாழனன்று பிரவி ஈஸ்டான் சர்விஸில் மாலை 8-மணிக்குப் பேசுவார்.

மத்திய மந்திரி சபையில் மாறுதல்?

மூவர் வெளியேறலாம்!

அரிகிருஷ்ண மத்தாபுக்கு 'சான்ஸ்' கிடைக்கும்

மத்திய மந்திரி சபையில் மாறுதல் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது.

தற்போது பதவியிலுள்ள மந்திரிகளில், மூன்று அல்லது நான்குபேர் ராஜிநாமா செய்வார்களென்று தெரிகிறது.

ஒரிசா முதலமைச்சர் தோழர் அரிகிருஷ்ண மத்தாபுக்கு நிச்சயம் ஒரு பதவி கிடைக்குமெனத் தெரிகிறது.

ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய நடன மண்டபம்

லண்டன், பிப். 22—

லண்டன் பார்க்லேன் ஹோட்டலிலுள்ள நடன மண்டபம் ஐரோப்பாவிலுள்ள எல்லா நடனமண்டபத்தையும்விட மிகமிகப் பெரியதாம். யுத்தசமயத்தில் இதுஉபயோகிக்கப் படாமல்போனதால் இதை மீண்டும் புதுப்பித்து உபயோகிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

மாலை மணி

சென்னை 23—2—50 வியாழக்கிழமை

புதிய இரத்தம்!

சளி கட்டி விட்டதே!

எதிரே நிற்பவர் யார் என்று அடையாளம் கண்டுபிடிக்கவும் முடியவில்லை

மேல் மூச்சு வாங்குகிறது.

கண் மங்கிக் கொண்டே வருகிறது.

பிதற்றல் அதிகமாகிறது

அவ்வளவு தான் இனி பிழைப்பது ஏது?

* * *

குடும்பத்தினர் குமுறுகின்றனர், இது போலக்கூறிக் கொண்டே. நிலைமை மோசமாகி விட்டது. உயிர் ஊசலாடுகிறது. உட்கொண்ட மருந்தெதுவும் பயனளிக்கவில்லை. உற்றார் உறவினரும் ஆருயிர்த் தோழர்களும், கண்ணைத் துடைத்துக் கொள்வதும், கை பிசைந்து கொள்வதுமாக உள்ளனர் மரணப் படுக்கையிலே பேச்சிழந்து கடைசீ மூச்சிழக்க வேண்டிய நிலையில் கிடக்கிறார் குடும்பத் தலைவர், இந்நிலையில்.

* * *

போன உயிரையே மீட்டு வரக்கூடிய பொன்னுங்கண்ணிச் சூரணம்.

மரணத்தை ஓட்டவல்ல மரகதச் சூரணம்.

குற்றுயிராகக் கிடப்பவரைக் கொழுக்கட்டை போலாக்க வல்ல குங்கிலியக் குளிகை— என்று ஏதேதோ பிரதாபம் பேசிக்கொண்டு, பழய கந்தல் மூட்டையைப் பிரித்து எதிரே வைத்துக்கொண்டு, பச்சை ஊதா, சிவப்பு, மஞ்சள், எனும் பல நிறம் கொண்ட சூரணம், குளிகை, மாத்திரை, தைலம் ஆகியவற்றினைக் காட்டுகிறார் ஓர் சித்த வைத்தியர். குடும்பத்தவரின் நிலை எங்ஙனம் இருக்கும்? கூடத்திலே குற்றுயிராகக் கிடக்கிறார் குடும்பத் தலைவர்—ஆற்றலால் அரிய காரியங்கள் பல முடித்தவர். தாழ்வாரத்திலே பேசுகிறார் மருத்துவர். என் செய்வர் குடும்பத்தினர்? எந்த மருந்தாயினும் சரி, உடனே தாருங்கள், இவரைக் காப்பாற்றி விடுங்கள், கோடிபுண்யம் உங்களுக்கு ஐயா! வைத்தியரே! உமது கீர்த்தியும், உமது மருத்துவ முறையின் நேர்த்தியும் ஊர் அறிந்ததல்லவா! உத்தமரே! உடனே, உயிர் பிரியாதிருக்க ஓர் மருந்து தருக—என்று தழதழத்த குரலிலே கேட்பர்—மருத்துவரிடம் கொண்ட மதிப்பால் அல்ல, குடும்பத் தலைவரைக் காப்பாற்றியாக வேண்டுமே என்ற பாசத்தின் காரணமாக.

* * *

பெரும்பாலும், வைத்தியரின் சூரணமும் குளிகையும் இப்படிப்பட்ட சமயங்களிலே. சங்கமும் தப்பட்டையும் வீட்டு வாசலிலே வந்து சேருவதற்கான செயலையே புரிந்துவிடும்.

* * *

மேனாட்டு மருத்துவ முறையினர் இவ்விதமான பேராபத்துக்காலத்தில், புதிய இரத்தத்தைப் புகுத்தும் முறையைக் கண்டறிந்து ஓரளவுக்கு வெற்றியும் பெற்றுவருகின்றனர் தீபம் தீய்ந்து போகுமுன் எண்ணெய் ஊற்றுவது போல, உள்ள இரத்தம் கெட்டோ குறைந்தோ ஆவிபோகும் நிலை ஏற்பட்டால், புதிய இரத்தத்தைப் புகுத்தி, மீண்டும் ஆவி ஒளிவிடச்செய்யும் முறை, இது போது ஓரளவுக்கு வெற்றி பெற்று வருகிறது.

* * *

சளி கட்டி, கண் மழுங்கி, பிதற்றல் அதிகமாகி, மேல் மூச்சு வாங்க, இனி பிழைப்பதேது என்ற கை கழுவி விடும் நிலைக்கு வந்துவிட்ட குடும்பத் தலைவன் போல, காங்கிரஸும் குற்றுயிரும் குறையுயிருமாகக் கிடக்கும் நிலைக்கு வந்துவிட்டது நோயாளியின் உடலில் புகுந்து, உடல் சத்தையும், உயிர்ச் சக்தியையும், உண்ணும் விஷக் கிருமிகள்போன்று 'பல விஷக் கிருமிகள்' காங்கிரஸின் உடலிலும் புகுந்து விட்டன. உயிர் ஊசலாடும் நோயாளியின் நிலைமை கண்டு குமுறும் குடும்பத்தினர்போல, காங்கிரஸின் நிலைமை கண்டு அதன் தலைவர்கள் உள்ளங் குமுறுகின்றனர்; கை பிசைகின்றனர்; கண் கலங்குகின்றனர்; என் செய்வது என்று எங்குகின்றனர்.

ஊசலாடும் உயிர் நிலை நிறுத்தப்பட்டால் போதும் என்ற நம்பிக்கையில் சூரணமாயினும், மாத்திரையாயினும், குளிகையானாலும், தைலமானாலும் அதன் தரம், குணம் எப்படியிருந்தாலும் ஏதோ ஒன்றின் மூலம் குடும்பத் தலைவன் பிழைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஓடியாடித் திரிந்து பக்குவந் தேடும் குடும்பத்தினர் போல, மகாராஜாவைக் கொண்டோ, மண்டலாதிபதியைக் கொண்டோ, மடாதிபதிகளை நம்பியோ, மார்க்கக் குருமார்களை நம்பியோ, மாஜி திவான்களின் நட்பைப் பெற்றோ, பணம் படைத்தவரின் தயவை நாடியோ, பட்டக்காரர்களிடத்தில் காவடி எடுத்தோ, பாளையக்காரர்களை அண்டி நின்றோ காங்கிரஸைப் பிழைக்க வைக்க, 'பாரத புத்திரர்கள்' பாடுபடுகின்றனர்.

சித்த வைத்தியரின் சூரணம் பெரும்பாலும் குடும்பத் தலைவனைச் சுடுகாட்டிற்கு இட்டுச் செல்லும் நிலையில் கொண்டுவந்து விடுவதுபோல, காங்கிரஸுக்குக் கொடுத்துப் பார்க்கும் 'மகாராஜ சூரணங்களும்', 'மாஜி திவான மாத்திரைகளும்', 'பணம் படைத்தோர் குளிகைகளும்', 'பாளையக்காரர்கள் தைலங்களும்' குற்றுயிர் நிலைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கின்றன.

காங்கிரஸ் தலைவர்கள் என் செய்வது என்று ஏங்குகின்றனர், நோயின் கொடுமையால் குடும்பத் தலைவர் பிரிந்து விடுவாரோ என்று ஏங்கும் குடும்பத்தினர் போல.

* * *

இந்த ஏக்க நிலையைக்கண்டு கலங்கும் பண்டிதநேரு, புது வைத்திய முறை ஒன்றைத் தேடுகிறார். காங்கிரஸின் நலிவைப் போக்கக் கூடியதாகக் கருதி புதிய முறை ஒன்றையும் வற்புறுத்தியுள்ளார், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் அந்தப் புதுமுறை தான், **காங்கிரஸின் புதிய இரத்தம் புகுத்தப்படவேண்டும் என்பதாகும்.**

இரத்தம் கெட்டுவிட்டாலோ, அல்லது குறைந்துவிட்டாலோ, புதிய இரத்தத்தை உடலிற் பாய்ச்சி, நோயாளியைச் குணப்படுத்தும் மேனாட்டு வைத்திய முறையைப்போல, காங்கிரஸிற்கும் புதிய இரத்தத்தைப் பாய்ச்சி, அதன் நிலையைத் தேற்ற பண்டிதநேரு முற்பட்டிருப்பது போற்றத்தக்கதுதான். காங்கிரஸில் புதிய இரத்தம் புகுத்தப்பட வேண்டும் என்று எடுத்துக் கொள்ளும் முயற்சி பாராட்டத்தக்கதுதான்; ஆனால் புகுத்தப்பட வேண்டிய இரத்தம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது தெளிவாக்கப்படவில்லை.

காங்கிரஸ் நோய் வாய்ப்பட்டிருக்கிறது—அது குணப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்—அப்படிக் குணப்படுத்த புதிய இரத்தம் புகுத்தப்பட வேண்டும் என்று தோழர் நேரு கூறும்போது, அவரது நேர்மை உள்ளத்தைப் பாராட்டத்தான் வேண்டும். காங்கிரஸினிடத்தில் நோய் இருக்கிறது; அது தீர புதிய இரத்தம் வேண்டும்; அந்தப் புதிய இரத்தத்தை எங்கிருந்து காங்கிரஸ் தலைவர்கள் பெறப் போகிறார்கள்? எப்படிப் பெறப் போகிறார்கள்?

* * *

நோயாளியின் உடலில் புதிதாகப் பாய்ச்சப்படும் இரத்தம், தூய்மையானதாக, நோய்க் கிருமிகளைக் கொல்லும் தன்மை வாய்ந்ததாக. புதிய வலிவு ஊட்டுவதாக இருக்கவேண்டும் காசம் கொண்டவன் குஷ்ட நோய் பிடித்தவன், க்ஷயரோகத்தால் பாதிக்கப்பட்டவன், ஆகியவர்களிடத்திலிருந்து புதிய இரத்தத்தைப் பெற்று, அதனை நோயாளியின் நோய் அதிகப்பட்டு, அவனைச் சவக்குழி நோக்கித் தள்ளிச் செல்ல அது பயன்படுமேயல்லாமல், கடைத்தேற்ற வழி செய்யாது. அதுபோல, காங்கிரஸில் புகுத்தப்படும் புதிய இரத்தம், இருக்கும் நோய்க்கிருமிகளை அழித்து, உடலுக்கு உறுதி பயக்கும் தன்மையதாக அமைந்தால்தான், பண்டித நேருவின் கூற்றுக்கு உண்மையான பயன் ஏற்படுவதாகக் கருத முடியும்.

காங்கிரஸில் நல்ல இரத்தத்தை ஓடச் செய்துகொண்டிருப்பவர்களாகக் கருதப்படும், தோழர்கள் பண்டிதநேரு, சர்தார்பட்டேல், ராஜேந்திர பிரஸாத், அபுல்கலாம் ஆஜாத், ஆச்சாரியா கிருபளானி, புருஷோத்தமதாஸ் தாண்டன் ஆகியவர்கள் இருக்கும் இப்பொழுதே காங்கிரஸில்நோய்க் கிருமிகள் மிகுந்துவிட்டன. அவர்கள் எல்லோரும் இருந்தும் நோய்க்கிருமிகள் அழிந்துபடவில்லை. ஆகவேதான் இவர்களைவிட நல்ல இரத்தம்—அதிகப்படியான இரத்தம் எங்கு, எப்படி எதிர்பார்க்கிறார்கள் என்று கேட்கத் தோன்றுகிறது.

* * *

காங்கிரசில் புதிய இரத்தங்கள் சிலவும் சேர்ந்திருக்கின்றன.

மோடி—இவர் ஒரு புதிய இரத்தம்! இவர் காங்கிரஸ்காரரல்ல—ஏகாதிபத்ய ஆட்சிக் காலத்தில் ஏகாதிபத்ய தாசராக விளங்கியவர்! அவர் இப்பொழுது காங்கிரஸ் ஆதிக்கத்தின் கீழ் கவர்னர் வேலை விரும்பித் தரப்பட்டுள்ளார்!

ஜான்மத்தாய்—இவர் ஒரு புதிய இரத்தம்! இந்த இரத்தம் மத்திய ஆட்சிப் பீடத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது! இவர் டாடாவிற்கு ஆலோசகராக இருந்தவர்—முதலாளித்வத்திற்குக் குத்துக்கால்! காங்கிரஸில் நாலணா அங்கத்தினராகக் கூட ஆகாதவர்! காங்கிரஸ் தலைவரால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பவர்.

என். கோபாலசாமி அய்யங்கார்—சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் ஒரு புதிய இரத்தம்! இவர் வெள்ளையன ஆட்சி காலத்தில், அவன் அதிகாரத்தை ஏற்று, அவன் விருப்பப்படி திவான் வேலையைத் திருப்திகரமாக நடத்திக் காட்டியவர்! போராட்டக்காலங்களில் காங்கிரஸோடு ஒத்துழைக்க மறுத்தவர்! காஷ்மீருக்கு வெளியே நேருவை நிறுத்தி வைத்தவர்!

டாக்டர் அம்பேத்கார்—சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் புதிய இரத்தம்! ஏகாதிபத்ய ஆட்சிக் காலத்தில் காங்கிரஸிற்கு முதல்வைரியாக விளங்கியவர்!

இவர்களைத் தவிர சர்தார் பட்டேல், மாஜி மன்னர்களையும், மாஜி திவான்களையும் வேண்டிய அளவிற்குப் புதிய இரத்தங்களாகக் கொண்டு வந்து சேர்த்துள்ளார்!

இன்னும் பல புதிய இரத்தங்களிடம், காவடிகள் தூக்கப்படுகின்றன!

* * *

இப்படிப்பட்ட இரத்தங்களையா பண்டித நேரு புதிய இரத்தம் என்று அழைக்க விரும்புகிறார்? அல்லது காட்ட விரும்புகிறார்?

இப்படிப்பட்ட இரத்தச் சேர்க்கையால், காங்கிரசின் நோய் தீரும் என்று நேருவோ, அவரைப் போன்ற காங்கிரஸ் தலைவர்களோ எண்ணுவார்களானால், அனுபவமற்ற வைத்தியரிடம் ஆற்றலற்ற சூரணம் பெற்று, நோயை முற்றவைத்துக்கொள்ளும் குடும்பத்தலைவன் போகும் நிலைக்குத்தான் காங்கிரஸும் போகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

உள்ளத்தூய்மையும், நேர்மை உழைப்பும் கொண்ட நல்ல புதிய இரத்தங்கள் காங்கிரஸ் உடலில் சேருகின்றன என்று வைத்துக்கொண்டாலும், ஏற்பட்டுவிட்ட நோய்க்கிருமிகள் அனைத்தும் அழிந்துவிடுமா என்பதும் ஐயமாகத்தானிருக்கிறது.

கெட்டுப்போன இரத்தத்தை நல்லதாக்க, என்று எண்ணிப் புதிதாக ஊட்டப்படும் இரத்தமும் கெட்டுவிடும் என்ற நிலை இருக்குமானால், புதிய இரத்தத்தையும் கெடுககாமலிருப்பது நல்லதல்லவா?

பாடுபட்டும் பயன்படாது என்றநிலை இருக்கும்போது,கெட்ட இரதத்தைக்கெட விட்டுவிட்டு, புதிய இரத்தத்தைப் புதிய நல்ல இரத்தமாகவே இருக்க விட்டுவிடுதல் நாட்டிற்கும் நல்லது; எதிர்கால நல்வாழ்வுக்கும் நல்லதல்லவா?

வெற்றி வீரர் போஸ்!

உடல் நலம் குன்றி ஸ்விட்ஜர்லாந்தில் தங்கி சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார் தோழர் சரத் சந்திர போஸ். அதே நேரத்தில்தான் மேற்கு வங்கத் தேர்தல் நடைபெற்றது இங்கே. சரத் போஸை எதிர்த்து நின்ற காங்கிரஸ் கட்சி தோல்வியுற்றது. போஸ் வெற்றிபெற்றார். ஆனால் போஸ் அங்கே! அவரோடன் போட்டியிட்ட ஆளும்கட்சியாளர் இங்கே! இந்நிலையில் தோழர்போசுக்குக கிடைத்த ஆதரவைப் பாருங்கள்!

சரத் போஸுக்கு	காங்கிரஸ் கட்சி உறுப்பினருக்கு
19,030 வாக்குகள்	5,780 வாக்குகள்

அறிவுக் கதிர்!

சமய சந்தர்ப்பங்கள் ஒருமனிதனை வலியவனாகவோ, எளியவனாகவோ ஆக்குவதில்லை. ஆனால் அது அந்த மனிதன் எப்பேர்ப்பட்டவன் என்பதை மட்டும் எடுத்துக் காட்டத் தவறுவதில்லை.

—செம்பஸ்

அனுதாபம்

ஐக்கிய சமதர்ம குடியரசுக் கட்சியின் தலைவரும், உரிமைப்போர் வீரருமான தோழர்சரத்சந்திரபோஸ் இருதயநோய் காரணமாக மறைவு எய்திய துக்கச் செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறேன். அவரது மறைவு இந்தியத் துணைக்கண்ட அரசியல் உலகிற்குப் பெருத்த நஷ்டமாகும். நாடு அவரது சேவையை எதிர்பார்க்கும் நல்ல வேளையில் அவரது மறைவு ஆற்றொணாத் துயரத்தைத் தருகிறது. அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர் தி.மு. கழகம்
காஞ்சிபுரம்
21—2—50

தி. மு. கழகக் கூட்டங்கள்

24 - 2 - 50

அறந்தாங்கி:— சி. என். அண்ணாத்துரை, என். எஸ். இளங்கோ, ஜி. பிரான்சிசம்.

சோழமூர்:— சி. பி. சிற்றரசு, முனிரத்தினம்.

26 - 2 - 50

ஆம்பூர்:— க. அன்பழகன், ப. இராமலிங்கம்.

அபிவிருத்தி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிந்தாதிரிப்பேட்டை, வண்ணாரப்பேட்டை இன்னும் இது போன்ற சில பகுதிகள் ஏழை மக்கள், பாட்டாளிகள் ஆகியோர் புழுக்களென வாழும் பொல்லாத பகுதிகளாகவும் அமைந்துள்ளன.

சேரி—சேரி அல்லாத பகுதி என்று பிரித்துப் பேசுவோர் முதலில் இத்தகைய பெரிய வேற்றுமை இந்நகர அமைப்பிலே இருப்பதை முதலில் உணரவேண்டும். உணர்ந்து இத்தகைய ஏற்றத்தாழ்வுகளை நீக்க முடலவேண்டும். அப்பட முயன்று பயன்காணும்போது சேரிகள் என்பதே இல்லாமற் போகும்.

சேரிகள், சேரி சுத்தம் செய்தல், சேரி அபிவிருத்தி என்றெல்லாம் பேசப்படுவதே பித்தலாட்டம் என்றுதான் சொல்லவேண்டும். மக்கள் ஒரே குலத்தினராய் வாழவேண்டும் என்று பேசப்படும் இந்நாளில், இம்மாதிரி பேச்சுக்கள் நடைமுறையிலிருப்பது அறமாகாது. இத்தகைய பேச்சுக்கள், சேரிகள் என்றும் சேரிகளாகவே இருக்கச் செய்யத்தான் பயன்படுமேயன்றி, சேரிவாழ்மக்களை மக்களாகவாழவழிவகுப்பனவல்ல.

மேலும் கமிஷனர் குறிப்பிட்டிருப்பதுபோல், குடிசைகளை நீக்கிவிடுவதால் மாத்திரமே சேரி அபிவிருத்தி செய்ததாகிவிடாது. இதனை வாழ்விடத்தின்தோற்றந்தான் மாறுமேயன்றி வாழ்க்கை நிலை மாறாது. அது மாறாதவரை—சேரி மக்கள் என்னும் இழிநிலை நீங்காதவரை, சேரிகள் சேரிகளாகத்தான் காட்சியளிக்கும். வேண்டுமானால், அப்படிப்பட்டப் பகுதிகள் எதிர்காலத்தில் நவீனசேரிகள் என அழைக்கப்படலாம்! அவ்வளவுதான்; இதுவரவேற்கத் தக்கதா என்பதை 'சமூக அபிவிருத்தி' பற்றிப் பேசும் அன்பர்கள் கவனிக்கவேண்டும்.

எனவே, சமூகசேவைஎன்ற பெயரில் இதுகாறும் போய்க்கொண்டிருக்கும்போக்கிலேயே ஆளவந்தார்களும், நகராண்மைக் கழகத்தாரும், சிறுத்தம் விழைவோரும் போய்க்கொண்டேயிராமல், ஒருபுதியபுரட்சிகரமான மாறுதலை உண்டுபண்ணவேண்டும் அப்படிச் செய்வதாயின் சேரி எது, மற்றப் பகுதி எது என்று தெரியாதவாறு நகர அமைப்பைச் சீர்திருத்தி அமைக்க முயலவேண்டும். சிற்றூர்களில் இப்பணி இயலாத பணியாகத் தோன்றினாலும் சென்னை போன்ற ஒரு பெரு நாகரிக நகரில் இதனைச்செய்ய வேண்டும். செய்வார்களா?

கோலர் தங்கவயல் தி. மு. கழக நிதிக்காக

கட்டுரைப் போட்டி

திராவிட நாட்டு மூத்தாளர்களே!

கோலார் தங்கவயல் தி. மு. கழக நிதிக்காக, ஓர் கட்டுரைப் போட்டி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நம் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் வரும் மார்ச்சு மாதத்தில் தங்கவயலுக்கு வருவதாக இசைந்துள்ளார்கள். அதுபோது நடக்கவிருக்கும் பொதுக்கூட்டத்தில் மேற்படி போட்டியில் வெற்றிபெறும் சிறந்த முதல் மூவருக்கு தகுதியான பரிசுகள் வழங்கப்படும்.

பொருள்:—திராவிடம் தனித்தியங்க முடியுமா?

விதிகள்:—(1) கட்டுரை ஒன்றுக்கு நுழைவுக் கட்டணம் ரூபாய் ஒன்று. மணியார்டர் இல்லை இல்லமல் வரும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கட்டுரை, சாதாரண முழுப் பக்க அளவில் நான்கு பக்கங்கள். கொண்டதாக இருக்க வேண்டும். கட்டுரை தேர்வுக்குழுவின் இறுதித்தீர்ப்பே முடிவானதாகும்.

(2) 4—3—50 வரையிலும் வரும் கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(3) பரிசு பெறுவோரின் பெயர்கள் 'மாலைமணி'யில் அறிவிக்கப்படும். பரிசுகளைத் தோழர் அண்ணாத்துரை அவர்கள் முன்னிலையில் நடக்கும் பொதுக் கூட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டி. கே. சின்னத்துரை,
விளம்பர உறுப்பினர்
திராவிட முன்னேற்றக் கழகம்
கோலார் தங்கவயல்
உரிசம் நார்த்டவுன்,
உரிகம் போஸ்ட், K. G. F.

ஏலூருவில் 144!

ஏலூரு, பிப். 21—

உதவி மாஜிஸ்ட்ரேட் தோழர் எம். அனுமந்தராவ் இங்கு 144-தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார். சர். சி. ஆர். ரெட்டி கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் கண்டன நாள் என்று கொண்டாட இருக்ததை முன்னிட்டு, இத்தடை உத்தரவு போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இவ்வுத்தரவு பதினைந்து நாட்கள்வரை நீடிக்கும்.

டாக்டர் சாட்டைக்கு அழைப்பு?

டமாஸ்கஸ், பிப். 22—

பொருளாதார விஷயங்களில் ஆலோசனை கூற ஜெர்மன் ரீச் பாங்கின் முன்னாள் தலைவர் டாக்டர் சாட்டை வரவழைப்பது பற்றி ஸிரியா மந்திரி சபை ஆலோசித்து வருவதாக 'அலமானு' என்ற பத்திரிகை கூறுகிறது.

நாஜி பொருளாதார நிபுணரான டாக்டர் ஷாட் நியூரம்பர்க் விசாரணையில் விடுதலை பெற்றவர்.

மக்கள் மன்றப் பொதுக்கூட்டம்

சென்னை இராயபுரம் மக்கள் மன்றத்தின் சார்பில் 24-2-50 வெள்ளி மாலை 5-30 மணிக்கு, இராயபுரம், பணமரத்தொட்டி அம்மன் கோவில் எதிர் மைதானத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ, என். ஜீவரத்தினம் எம். சி. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

குறிஞ்சிப்பாடி, பிப். 20—

17—2—50 சென்னையில் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்களை தோழர்கள் சாம்பசிவம், இளங்கோ, பழனிச்சாமி முதலியவர்கள் சந்தித்து மாநாட்டு விஷயமாகப் பேசி முடித்து திரும்பிவிட்டார்கள், பொதுச் செயலாளர் நாடகம் நடத்த அனுமதி தந்துவிட்டார்கள். மற்றும் சொற்பொழிவாளர்களும் தங்களின் ஒப்புதலைத் தந்துவிட்டார்கள். குறிஞ்சிப்பாடியில் மாநாட்டுக் கொட்டகை வேலை துரிதமாக நடந்துகொண்டிருக்கிறது. சாப்பாடுசம்பந்தமான முன்னேற்பாடுகள் நடந்துவருகின்றன. மாநாட்டில் ஸ்டால் வைப்பவர்கள் முன் கூட்டியே வரவேற்புக்குழுவினருக்கு தெரிவித்துக்கொள்ள வேண்டும். மாநாட்டு வரவேற்புக் குழுவினர்களும், மாவட்ட அன்பர்களும் 26—2—50-ல் குறிஞ்சிப்பாடியில் நடைபெறும் கமிட்டிக் கூட்டத்திற்குத் தவறாமல் வந்திருந்து ஆலோசனை சொல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வரவேற்புக் குழுவினர்

பசியைப் போக்க கன்னக்கோல்!

திருத்தங்கல், பிப். 21—

நேற்று இரவு இவ்வூர் சீனிவாசராவ் உணவு விடுதியில் சில திருடர்கள் கன்னம்வைத்து உள் புகுந்து அங்குள்ள பாத்திரங்களிலிருந்த உணவை வெளியில் எடுத்துவந்து உணவை உண்டுவிட்டு, பாத்திரங்களை விடுதிக்கும் பின்னால் போட்டுவிட்டுப்போயிருக்கிறார்கள். வேறு இடத்தில் வேறு இடத்தில் திருடிய சில சாமான்களும் கிடந்தன. இச்சம்பவம் கிராம அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச. சி.)

எகிப்து-பாகிஸ்தான் யூனியன்

எகிப்து—பாகிஸ்தான் யூனியன் ஏற்படுத்துவதற்காக எகிப்திய பாகிஸ்தான் கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இக்கமிட்டியின் மெம்பரான மௌல்வி பாஷிபே குரேஷி நிருபரிடம் கூறுகையில், அரபு பாஷையையும், அரபு கலாசாரத்தையும் பாகிஸ்தானில் பரப்புவதே இந்த யூனியனின் நோக்கம் என்று கூறினார்.

சிந்தனைக்கு உதவி செய்யும் இயந்திரம்!

ஒரு விஷயத்தை நாம் சரியாக யோசிக்காவிட்டால், நம் தவறைத் திருத்தி சரியாக யோசிக்கச்செய்ய ஒரு புதிய இயந்திரத்தை மான்செஸ்டர் சர்வ கலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் டதன்டூ மேல் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார்.

ஒரு விஷயம் இந்த இயந்திரத்திடம் தெரிவிக்கப்பட்டால் அதன் சாதகபாதகங்கள் என்னென்ன என்பதைவெளியிடுகிறதாம்.

மறைந்த மாவீரர் சரத்சந்திரபோஸ் சிந்திய மணிமொழிகள் சில!

பொதுமக்கள் கடந்த சில ஆண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்டும், ஏமாற்றப்பட்டும் வந்திருக்கிறார்கள். இந்த அடிமை வாழ்வும், ஏமாற்றமும் ஒழிக்கப்படவேண்டுமானால், சமத்துவ—முற்போக்குச் சக்திகள் அனைத்தும் ஒன்றுதிரண்டு இணைந்து, "ஒரு கட்சி" சர்க்காரையும், சட்டசபைகளையும் விரைவில் ஒழித்துக்கட்டியாகவேண்டும்

* * *

இந்நாட்டு சர்க்கார்—யந்திரம் ஒரு சில பண மூட்டைகளால் இயக்கப்பட்டுவருகிறது. நேற்றுவரை பிற்போக்குவாதிகளாக, ஆதிக்கச் சுரண்டல்காரர்களாக இருந்தவர்கள், இப்பொழுது நமது எஜமானர்களாக, நல்ல நடும் தலைவர்களாகப் பதவிக்கு வந்துவிட்டனர்.

* * *

நமது ஏகக் கட்சி சட்டசபைகள்—மத்தியிலும் மாகாணங்களிலும்—வல்லமைமிக்க உயர்ந்தோர் ஒரு சிலரின் ஆணையை மட்டும் நிறைவேற்றி வருகின்றன.

காங்கிரஸ் மேலிடத்தவருள் பெருவாரியினர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு உறவாடி நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்ளவே ஆசைப்படுகின்றனர். பிரிட்டிஷ் இராஜதந்திரமும் இவர்களைத் தக்க முறையில் பயன்படுத்திக்கொண்டது.

* * *

டொமினியன் அந்தஸ்து நமக்குக் கிட்டிய நாள் முதற்கொண்டு, மத்தியிலும் சரி, மாகாணங்களிலும் சரி, நிர்வாக ஊழல்கள் மலிந்து வருவதைக் கண்ணாரக் கண்டு வருகிறேன். சுற்றத்தாருக்குப் பட்ச பாதம், நண்பர்களுக்குச் சலுகை, லஞ்ச ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன.

* * *

பத்திரிகைகள் நசுக்கப்படுகின்றன. மக்களின் பிரஜா-வுரிமைகள் தயவு தாட்சண்யமின்றி தகர்த்துத் தவிடுபொடியாக்கப்படுகின்றன. நசுக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், அலட்சியப்படுத்தப்பட்டோர் இன்னபிறரின் மீகாரிகைகளுக்கு லத்திபடிகள், கண்ணீர்ப்புகை, தோட்டாக்கள் இன்னபிறவே பதிலாகப் பரிசளிக்கப்படுகின்றன.

* * *

உண்மையைக் காணுமிடத்து எல்லா மாகாணங்களும் கள்ள வியாபாரக் கொள்ளை, உயர்வுச் சலுகை வகைகள், ஊழல் முதலியவைகள் பட்டுத் தவிக்கின்றன.

காங்கிரஸ் எம். எல். ஏ. ராஜிநாமா!

—(0)—

காங்கிரஸின் முதலாளித்வப் போக்கே காரணம்!

கோலகாபூர், பிப். 21—

பம்பாய் சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினரான தோழர் எஸ். என். மனே காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிவிட்டார்.

தனது ராஜிநாமாவுக்குக் காரணங்களை விளக்கி அவர் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் "காங்கிரஸ் முதலாளித்துவ ஆதரவு பெறும் ஸ்தாபனமாக ஆகிவிட்டது மாகாணப் பிரிவினை பிரச்னையை அளவுகடந்து ஒத்திபோட்டுக்கொண்டே போகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். தோழர் மனே 1946-ல் காங்கிரசில் சேர்ந்தார்.

உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

சென்னை, பிப். 21—

நேற்று பிற்பகல் முதற்கொண்டு சுமார் அறுபதுக்கு மேற்பட்ட சென்னை டிராம்வேத் தொழிலாளர்கள் போனஸ் கோரி உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் கடற்படையைச் சேர்ந்த ஒரு யூனிட் பிப். 24-ந் தேதி லெபனான் துறைமுகமான பீரட்டிற்கு விஜயம் செய்யும் எனத் தெரிகிறது.

ஸ்டேஷன் மாஸ்டர் கொலை!

லண்டன், பிப். 22—

அம்மாராவிற்கு நாற்பது மைல் தூரத்திலுள்ள சமாபாடோரனோவின் ஸ்டேஷன் மாஸ்டரும், முஸ்லிம் லீக் மெம்பருமான நாஸெர் அல் உதீன் சையிர்என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்றும், இவர் சவ ஊர்வலத்தின் போது கைக் குண்டு வீசப்பட்டதென்றும், இதைத் தொடர்ந்து கிருஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டதென்றும் செய்தி கிடைத்திருக்கிறது. பிரிட்டிஷ், அமெரிக்கத் துருப்புகள் நிலைமையை சமாளிக்க வரவழைக்கப்பட்டதாம்.

கொலையுண்ட ஸ்டேஷன் மாஸ்டருக்கு யூனியனிஸ்டு கட்சியில் சேரும்படி பல பயமுறுத்தல் கடிதங்கள் வந்தனவாம். அதை அவர் மறுத்ததினாலேயேதான் அவர் உயிருக்கு உலை வைக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

'டேப் டான்ஸ்' ஆடும் வெள்ளாடு

நியூயார்க், பிப். 22—

ஆங்கில பிரபல நடனமான 'டேப் டான்ஸ்'ஸை ஒரு வெள்ளாடு ஆடுகிறது என்றும், அமெரிக்க பிலிம் ஸ்டுடியோ இதைத்தன் படங்களில் நடிக்கச்செய்துவருகிறது என்றும் தெரியவருகிறது.

வைத்திய வள்ளல் மறைவுக்கு நாடெங்கும் துக்கம்

சென்னை

சென்னை பழனிசாமி நினைவுப் படிப்பகத்தின் சார்பாக லாட்டர்ஸ் ரோட் லேனில் 12-2-50 ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ண சாமி அவர்கள் மறைவுக்காக தோழர் சா. சி. மு. ஜீவரத்தினம் அவர்கள் தலைமையில் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது சீர்திருத்த செம்மல் ஈ.வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவெய்தியதைக்கேட்டு இக்கூட்டம் வருந்துவதோடு, கணவனை இழந்து தவிக்கும் அரங்கநாயகி அம்மையாருக்கும், மற்றும் அவர்தம் சேய்களுக்கும் இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

திருச்சி

தி. மா. தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், கழகக்கட்டிடத்தில், 12-2-50 ஞாயிறு அன்று காலை தோழர் டி. டி. சிவபுண்ணியம் அவர்கள் தலைமையில் நிகழ்வுற்றது. அதுபோது தோழர்கள், சி. பி. சிற்றரசு, ஜி. பராங்குசம், ஆகியோர் வைத்திய வள்ளல் ஈ. வே. கி. அவர்கள் இயற்கையெய்தியதைக் குறித்து, வருத்தம் தெரிவித்து, அவர்தம் அரும்பணியை விளக்கி சொற்பொழிவாற்றினர். பிறகு அன்னார் மறைவு குறித்து இக்கூட்டம் அனுதாபப்படுவதாகவும், அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

வீரசோழம்

வீரசோழம் (கிளை) தி. மு. கழக செயற்குழு அவசரக் கூட்டம் 11-2-50 ல் கூடி பெரியார் ஈ. வே கிருஷ்ணசாமி அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு இக்கூட்டம் வருந்துவதோடு, அன்னாரவர்களின் குடும்பத்தாருக்கு குறிப்பாக ஈ.வே கி. சம்பத் அவர்களுக்கும் இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியது.

பெங்களூர்

பெங்களூர் அக்கிப்பேட்டை தி. மு. கழக சார்பில் 16-2-50 ல் தோழர் எ. தனபாலன் அவர்கள் தலைமையில் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மறைந்த வைத்தியவள்ளல் ஈ. வே. கி. அவர்கட்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும் தலைமகனார் சம்பத் அவர்கட்கும் கழகத்தின் சார்பில் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சுண்டக்காமுத்தூர்

14-2-50 ம் தேதி இரவு இவ்வூர் தி. மு. கழகக் கமிட்டிக் கூட்டம் கூடி வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவு குறித்து ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தவுட்டுப்பாளையம்

15-2-50 புதன்கிழமை மாலை 6-மணிக்கு தோழர் தி. மு. காதர் பாட்சா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தீர்மானம் — வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களின் மறைவுக்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் கூட்டம் இனிது முடிந்தது.

வேலூர் வேலப்பாடி

வேலூர் வேலப்பாடி தி. மு. கழகத்தின் சார்பாக 5-2-50

வைத்திய வள்ளல் மறைவுக்கு ஈரோட்டில் இரங்கற் கூட்டம்

பலகட்சிப்பிரமுகர்களும் பங்கு கொண்டனர்

ஈரோடு, பிப். 19—

19—2—50 ஞாயிற்றுக்கிழமை ஈரோட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவு குறித்து இரங்கற் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எல்லாக் கட்சித் தோழர்களும், உள்ளூர் பிரமுகர்கள் அனைவரும் கலந்துகொண்டு தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டனர். ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணியிலிருந்து மாலை 6-மணி வரை மழை இடைவிடாமல் பெய்துகொண்டே இருந்தது. மழையின் காரணமாக காரை வாய்க்கால் மைதானத்தில் நடைபெறுவதாக இருந்த கூட்டம் மகாஜன உயர்நிலைப் பள்ளியில் உள்ள கலைமகள் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

காலையில் இருந்தே சேலம், திருச்செங்கோடு, பவானி, கரூர், செகுடந்தானி, காரைக்குடி, காஞ்சிபுரம், சென்னை, பேளுக்குறிச்சி ஆகிய ஊர்களிலிருந்து நமதியக்கத் தோழர்கள் வந்து ஈ. வி. கே. சம்பத் அவர்களிடமும், ஈ. வி. கே. செல்வம் அவர்களிடமும், அவர்கள் குடும்பத்தாரிடமும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டனர். மாலை 6-30-மணிக்கு மகாசன உயர்நிலைப் பள்ளியில் கூட்டம் துவங்கியது. கூட்டத்திற்கு உள்ளூர் பிரமுகரான வழக்கறிஞர் ஈ. எஸ். தண்டபாணி அய்யர் பி. ஏ. பி. எல், அவர்களைத் தலைமை வகிக்குமாறு தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்களால் முன்மொழியப்பட்டு, தண்டபாணி அய்யர் தலைமை வகித்து பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களைப் பற்றிப் பேசி தன் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார். பின்னர் நகரசபைத் தலைவர் தோழர் எஸ். கே. சென்னியப்ப கவுண்டர், நகரசபைத் துணைத்தலைவர் கே. என். குப்புசாமி பிள்ளை, எம் சிக்கைய நாயக்கர், கேசவலால் காளிதாஸ் சேட். ஜி. அற்புதசாமிபிள்ளை பி. ஏ. பி. எல்., என். வெங்கடாசலம், முனிசிபல் கமிஷனர் வேதாசலம் பி. ஏ., நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, பேளுக்குறிச்சி ஜி. டி. சோமசுந்தரம், கே. வி. சுப்ரமணியம், ஆர். பெருமாள் எஸ். அப்பாவு ஆகியவர்கள் அனுதாபம் தெரிவித்து பேசிய பிறகு, தி. மு. க. பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள், மறைந்த வைத்திய வள்ளல் அவர்களைப்பற்றி பலரும் பேசியதை எடுத்துக்கூறி, பெரியார் கிருஷ்ணசாமியின் அன்பு, புன்னகை, அருங்குணம், அவரால் ஏற்பட்ட நஷ்டம் ஆகியவைகளைப்பற்றி தெளிவாகக்கூறி தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார். பின்னர் தலைவரின் அறிவிப்பின்படி கூட்டத்திலிருந்த எல்லோரும் ஒரு நிமிட நேரம் எழுந்து நின்று தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர். அத்துடன் கூட்டம் முடிவுற்றது. (ந-நி)

ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் பெரியார் தமையனார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் இறந்ததை முன்னிட்டு இக்குழு ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

சிவகாசி

கடந்த 12-2-50 அன்று சிவகாசி தி. மு. க. சார்பாக தோழர் கூ. ச. சு. பெரியகருப்பணபிள்ளை நந்தவனத்தில் தோழர் ஏ. சுப்பையா அவர்கள் தலைமையில் வைத்திய வள்ளல் ஈ.வெ.கி. அவர்கள் மறைந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கழக நடவடிக்கைகள்

பண்ருட்டி:—இவ்வூர் தி. மு. க. செயற்குழு, 5-2-50 ஞாயிறு காலை 10-மணிக்கு பண்ருட்டி கடைவீதி எஸ். எஸ். லிங்கம் எலக்ட்ரிக் ஷாப்பில் ச. குமாரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. புதிசெயற்குழு உறுப்பினர்களாக ஜெ. தர்மாஞ்சலு, அப்துல்வஹாப் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தென்னார்க்காடு மாவட்ட கழகச் செயற்குழு உறுப்பினர்களாக ஜெ. தர்மாஞ்சலு, அப்துல் வஹாப்அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது

* * *

திருவாரூர்:—திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் 10 வது செயற்குழுக் கூட்டம் 14—2—50 மாலை நடைபெற்றது அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெரியார் ஈ. வே. கிருஷ்ணசாமி, அவர்கள் இயற்கையெய்தியது குறித்து இக்கழகம் தன் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னார் குடும்பத்திற்கும், இயக்கத்தோழர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறது

மூன்று கூட்டங்களுக்கு வருகை தராத உறுப்பினர்கள் நீக்கப்பட்டு, கீழ்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொருளாளர்:-வெ. சிவலிங்கம், உறுப்பினர்கள்:- ஆர். பாலகிருட்டிணன், ப. க. கணபதி, எஸ். எம். வைத்திலிங்கம்.

அண்ணா அறிவுக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. இக்குழுவினர் தோழர் ச. ஜேசுதாஸ் எழுதிய "வேலைக்காரன்" என்ற பிரச்சார நாடகத்தை முதன் முதலாக நடிப்பார்கள். இறுதியில் இரா. தென்னன் (செயலாளர்) நன்றிகூற கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

மேலைப்பழூர்:— இவ்வூர் தி. மு. கழக செயற்குழுக்கூட்டம் தோழர் எம். ஆர். செல்லப்பா அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது ஈரோடு வைத்திய வள்ளல் ஈ. வே. கி. அவர்கள் மறைவுக்கு அனுதாபம் காட்டி ஓர் தீர்மானம் நிறைவேற்றியது. பிறகு பிரதான உறுப்பினர்களை, உறுப்பினர்கள் சேர்ப்பதில் அதிகக் கவனம் செலுத்துமாறு தலைவர் கேட்டுக்கொண்டார். இறுதியாக தோழர் டி. வி. தெ. சுந்தரராசன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

ஆத்தூர் —14-2-50-ல் தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் கூடி, கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது. தீர்மானங்கள்:—

குணக்குன்று பெரியார் ஈ. வெ. கி. மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

வ. ஆ. மாவட்ட கழகத்திற்கு பிரதிநிதிகளாக த. பொன்னம்பலம், இரா. சீனிவாசன் ஆகிய இருவர்களை அனுப்ப தேர்ந்தெடுக்கப்பட்டது.

விளம்பர உறுப்பினர்கள் அடுத்த மூன்று உறுப்பினர் கூட்டத்திற்கு வாராததாலும், அக்கிரமமான காரணத்தாலும் மணி எழிலன் அவர்களை ஏகமனதாக நீக்கப்பட்டது. ஆத்தூர் பஞ்சாயத்து போர்டில் நடக்கும் ஊழலை வன்மையாகக் கண்டிக்கிறது.

சேலம் சிறையில் அரசியல் கைதிகளை அக்கிரமமாக சுட்டுக்கொன்றதை வன்மையாகக் கண்டிப்பதுடன், பகிரங்க விசாரணை சென்னை அரசியலார் வேண்டப்படுகிறது. மேலே கண்ட தீர்மானங்களை எல்லோரும் ஏகமனதாக ஒப்புக்கொண்டு, இரவு 8 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

மணமேல்:—20-1-50 ல் இவ்வூர் குதாகல நிலையத்தில் தி. மு. கழகக் கூட்டம் ஆ. செங்கிலிங்கம் அவர்கள் தலைமையில்கூடியது. டி கழகச் செயலாளர் எம். வி. பெருமாள் அவர்கள் அவர் உடல் நிலையை முன்னிட்டு அவர் எழுதிக் கொடுத்த ராஜிநாமாவைக் கழகத் தோழர்களின் மூலம் அங்கீகரிக்கப்பட்டது.

1. டி கழகத்திற்கு பெ. மாணிக்கம் அவர்கள் செயலாளராக எல்லோராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

2. கூடிய சீக்கிரம் தோழர் அண்ணாத்துரையையும், மற்றைய பேச்சாளர்களையும் மணமேல்க்கு அழைத்து, கூட்டம்நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

3. இக்கழக முன்னேற்றத்திற்காக நிதி திரட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

திருவனந்தபுரம்:—தி. மு. கழகத்தின் சார்பில் "பகுத்தறிவு சொற்பொழிவு மன்றம்" என்ற ஒன்றமைக்கப்பெற்று, ஒவ்வொரு வாரந் தோறும் சொற்பொழிவு நடத்தி வருகிறது. சொற்பொழிவு பயிற்சியில், கழகத்தில் இல்லாத பேர்களும் ஆவலோடு கலந்துகொள்கிறார்கள்.

11-2-50 அன்று நடந்த கூட்டத்தின்போது. பெரியாரின் பெரியார் தோழர் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களது மறைவுக்குக் கூட்டத்தினர் தங்களது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

* * *

மாயவரம்: தி மு. க. செயற்குழுக் கூட்டம் 12-2-50 மாலை 6 மணிக்கு தோழர் வை. மாணிக்கம் தலைமையில் கூடியது.

நிறைவேற்றிய தீர்மானங்கள்

1. 4-2-50ல் வைத்திய வள்ளல் தோழர் ஈ. வே. கி. அவர்கள் இயற்கை எய்தியமைக்கும் இச்செயற்குழுவினர், தமது ஆழ்ந்த அனுதாபத்தை, தோழர் சம்பத் அவர்கட்கும், அவர் தம் குடும்பத்தினர்கட்கும் தெரிவித்துக்கொள்கிறது.

2. நன்கொடை வரவு ரூ. 148—2—0

4-2-50ல் நடைபெற்ற பொதுக் கூட்ட செலவு ரூ. 104—14—0

கழகக் கட்டிட சம்பந்தமான சாமான்கள்,

இதர செலவு வகையறு	38—4—0
ஆக செலவு ரூ.	143—2—0
வரவு ரூபாய்	148—2—0
செலவு ரூபாய்	143—2—0
கையிருப்புரூபாய்	5—0—0

பொருள் உறுப்பினர் தோழர் ஆர். பழனிசாமி அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

3. 26-2-50ல் நமது நகருக்கு வரும் நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கட்கு இவ்வூர் தி. மு. க. சார்பில் ஓர் வரவேற்பிதழ் வாசித்தளிக்க இச்செயற்குழு ஏகமனதாக தீர்மானிக்கிறது.

பின்னர் செயலாளர் நன்றி கூற செயற்குழு முடிவுற்றது.

இந்தியா - பிரிட்டிஷ் வர்த்தகம்

லண்டன், பிப். 22—

சென்ற வருஷம் இந்தியா-பிரிட்டிஷ் வர்த்தகம் 1948ம் வருஷத்தை விட அபிவிருத்தியடைந்திருக்கிறதென்பது பிரிட்டிஷ் வர்த்தக போர்டு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகிறது

இந்தியாவிலிருந்து பிரிட்டனில் இறக்குமதி 98214694 பவுன் (1948ல் 96348285 பவுன்.)

இந்தியாவுக்குபிரிட்டனிலிருந்து ஏற்றுமதி 117131641 பவுன் (1948ல் 96028016 பவுன்.)

வருமான வரியைக் கணக்கிடும் இயந்திரம்!

நியூயார்க், பிப். 20—

ஒருவரின் வருமான வரி எவ்வளவு என்பதைக் கண்டுபிடித்து, ஒரு வினாடியில் கணக்கிட்டு சொல்லக்கூடிய இயந்திரம் யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் வசம் இருக்கிறது என்ற செய்தியையும், இன்னும் இத்தகைய புதியதற்புதியும் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படும் என்றும் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள் என்பதையும் ஒரு நியூயார்க் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. இத்துடன் பின்கண்டவைகளில் எவை கண்டுபிடித்தால் நல்லது என்று பொது மக்கள் அபிப்பிராயப்படுகின்றனர் என்ற கேள்வியைக் கேட்டு, ஒரு பட்டியலைப் பிரசுரித்திருக்கிறது. அந்தப் பட்டியல் பின்வருமாறு:—

1. ஒரு பவுண்டன்பேனாவை யாராவது திருடு செய்யும் சமயத்தில் குரைக்கக் கூடிய பேனா.

2. டெலிபோனில் கூப்பிட்டு திட்டுபவர்களை யார் என்று கண்டுபிடிக்கும் சாதனம்.

3. தன்னை எதிர்பார்க்கும்காதலி எவ்வளவு நேரத்தில் வந்து சேருவாள் என்பதை அறிவிக்கும் இயந்திரம்.

4. இதர கிரகங்களில் புல், பூண்டு மனித வாசனை இருக்கிறதா, அங்குள்ளவர்கள் நம்மிடம் பணக்கடன் கேட்பார்களா என்பதை அறிவிக்கும் இயந்திரம்.

காற்றுவிசையிலிருந்து மின்சார உற்பத்தி

லண்டன், பிப், 21—

வடக்கு, மேற்கு ஸ்காட்லாந்து பிரதேசங்களில் காற்று விசையிலிருந்து மின்சாரசக்தியை உற்பத்தி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கான இயந்திர மாடல் ஒன்று எடின்பரோ ராயல் ஸ்காட்டிஷ் மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

ஆர்னியில் காஸ்டாகுன்றின் மீது இம்மாதிரி காற்றுவிசை மின்சார உற்பத்தி இயந்திரம் வைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த இயந்திரத்தின் விசிறி ஒவ்வொன்றும் 30 அடி நீளமாம்.

பசும் பால் பண்ணை

அர்ச்சனன் ஞானசேர்த்த பசும் பால் பண்ணை ஒன்று தோழர் என். இ. பாலகுரு அவர்களால் ஈரோடு ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில் ஈ எம். நமசிவாயம் அவர்களின் புதிய கட்டிடத்தில் திறக்கப்பட்டிருக்கிறது.

10-2-50 தேதி டி பண்ணை ஆரம்ப விழா முனிசிபல் சேர்மன் தோழர் எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் தலைமையில் நடைபெற்றது.

தோழர் ஈ. எம். அண்ணாமலை பி. ஏ., பி. எல்., பண்ணைத் திறப்பு விழாவாற்றினர்.

தளபதி அர்ச்சனன் திருஉருவப் படத்தைத் தோழர் ம. ஷண்முக வேலாயுதன் திறந்துவைத்தார்,

நடிகர் நாராயணபிள்ளை பசும் பாலின் குணம்பற்றிப் பேசினர்.

தோழர் பாலகுரு நன்றி கூறி வந்திருந்தோர் அனைவருக்கும் பசும் பால் வழங்கி, சந்தனம் தாம்பூலம் வழங்கினர்.

பான், பிப். 20—

பவேரியாவின் அதிகாரியான கந்தர் கோட்லெண்டிராப் ஹிட்லரின் புவ சந்தைதை நடத்தியவர் என்ற புகாரை பார்லிமெண்டரி அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இது உண்மை என்று ஏற்பட்டால், அவருக்குப்பதவி போய்விடும் இவர் சமீபத்தில் பார்லிமெண்ட் மெம்பர் ஒருவரை அடித்து விட்டாராம்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1